2023 ஏப்ரல் 12]

முற்பகல் 10–55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. சரஸ்வதி அவர்கள்.*

டாக்டர் சி. சரஸ்வதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மஞ்சள் சிறப்பு மையம் அமைப்பதற்கு ஏற்கெனவே நிலத்தைக் கையகப்படுத்தி, வேலைகளை ஆரம்பித்து விட்டார்கள். அதற்கு நீங்கள் சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்து கொடுத்தால், அந்தப் பணிகள் வேகமாக நடைபெறும் என்று நினைக்கிறேன். மேலும், மஞ்சளை* pesticides *போட்டுதான் சேமித்து வைக்கிறார்கள். எனவே, மஞ்சளை சேமித்து வைப்பதற்குக் குளிர்பதனக் கிடங்கு அமைத்துக் கொடுத்தால், நமக்கு நச்சு இல்லாத மஞ்சள் கிடைக்கும். அதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்து கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மை– உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு, பெருந்துறை, கருமாண்டிசெல்லிபாளையத்தில் மஞ்சள் சந்தை வளாகம் 2015 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. இங்குள்ள 9 விற்பனைக் குழுக்களின்கீழ் செயல்படும் 27 ஒழுங்குமுறை சந்தைகள்மூலம் 2022 ஆம் ஆண்டில் 433 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மஞ்சள் கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது. அதேபோன்று, ஒழுங்குமுறை விற்பனைக்கூடக் கிடங்குகளில் மஞ்சளை ஓராண்டுக் காலம் வரை பாதுகாப்பாகச் சேமிக்க வசதி உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 148, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சதாசிவம், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

148—

சிப்காட் தொழிற்பூங்கா

***51030—திரு. S. சதாசிவம்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2023 ஏப்ரல் 12

மேட்டூர் தொகுதி, கொளத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் சிப்காட் தொழிற்பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மேட்டூர் தொகுதி, கொளத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் புதிதாக சிப்காட் தொழிற்பூங்கா அமைக்கும் உத்தேசம் ஏதும் தற்போது அரசிடம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சதாசிவம் அவர்கள்.

திரு. S. சதாசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய மருத்துவர் அய்யா அவர்களை வணங்குகிறேன். எங்களுடைய பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர், முன்னாள் மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் அண்ணன் அன்புமணி அவர்களை வணங்குகிறேன். மேட்டூர் தொகுதி மக்களுக்கு நன்றி. என்னுடைய தொகுதியில் ராஜா என்பவர் உயிரிழந்ததற்கு, அவருடைய குடும்பத்திற்குக் கருணையின் அடிப்படையில் ரூ.5 இலட்சம் வழங்கிய நம்முடைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூர் தொகுதி, கொளத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் சுமார் 1 இலட்சத்து 20 ஆயிரம் மக்கள் வசித்து வருகிறார்கள். அந்தத் தொகுதியில் குறு, சிறு, நடுத்தரத் தொழில்கள் எதுவுமே நடைபெறுவது இல்லை; விவசாயம்தான் நடைபெறுகின்றது. அந்தத் தொகுதி கர்நாடகாவின் எல்லையில் அமைந்திருக்கிறது. ஆகவே, தொழிற்சாலைகள் இல்லாத காரணத்தினால், அங்குள்ள படித்த இளைஞர்கள் பக்கத்திலிருக்கின்ற பெங்களூரு மாநிலத்திற்கும், கோயம்புத்தூர் போன்ற பிற மாவட்டங்களுக்கும் செல்ல வேண்டிய அவல நிலையிருக்கின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சதாசிவம், நீங்கள் என்னைப் பார்த்துப் பேசுங்கள்.

திரு. S. சதாசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றுமில்லை, ஒன்றுமில்லை; நட்புதான். என்னுடைய

2023 ஏப்ரல் 12]

தொகுதியைச் சேர்ந்த ராஜா என்பவர் மரணமுற்றதற்காக, அவருடைய குடும்பத்திற்கு 5 இலட்சம் ரூபாயை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், எங்கள் மாவட்டத்தினுடைய பொறுப்பு அமைச்சர் அவர்களும் அறிவித்திருக்கிறார்கள். அதற்காக, என் சார்பாகவும், மேட்டூர் தொகுதி மக்களின் சார்பாகவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், எங்கள் மாவட்டத்தினுடைய பொறுப்பு அமைச்சர் மாண்புமிகு அண்ணன் திரு. கே.என். நேரு அவர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேட்டூர் தொகுதி ஒரு பெரிய தொகுதியாகும். அங்கு இரும்புத் தொழிற்சாலை இருக்கின்றது; Chemplast *தொழிற்சாலை இருக்கின்றது;* PVC-*யை உற்பத்தி செய்கின்றார்கள். இரும்புத் தொழிற்சாலையில் அதிக அளவில் உற்பத்தி செய்கிறார்கள். அனல் மின்சாரம் மேட்டூரில் இருக்கிறது. அதிலிருந்து ஒரு மாதத்திற்கு 5 இலட்சம் டன் உலர் சாம்பல் வருகின்றது. இந்தியாவில், மெக்னீசியம் சல்பேட் மேட்டூரில் தயாரித்து வருகிறார்கள். ஆகவே, இதை மூலப் பொருளாகக் கொண்டு. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு.* S. *சதாசிவம், மாண்புமிகு அமைச்சர் அவர்கள், புதிதாக சிப்காட் தொழிற்பூங்கா அமைக்கும் உத்தேசம் தற்போது அரசிடம் இல்லை என்று பதில் சொல்லியிருக்கிறார்கள். நீங்கள் மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று கேளுங்கள்.*

திரு. S. சதாசிவம்: *தொழில் துறை மிக முக்கியமான துறை என்பதால்தான் கேட்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அமைக்கப்படும் என்று சொல்லியிருந்தால் கேட்டிருக்கமாட்டேன். தொழில் முக்கியமல்லவா! அந்தத் தொகுதி பெரிய தொகுதி. எனவே, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள், (மணியடிக்கப்பெற்றது) அந்தப் பகுதியில் மின்சாரம் இருக்கின்றது; குடிநீர் இருக்கின்றது; சாலை வசதிகள் இருக்கின்றன. மேட்டூர் நகராட்சியில் 150 ஏக்கர் அரசு நிலங்கள் 50 ஆண்டுக் காலமாக பயன்படுத்தப்படாமல் இருக்கின்றன. கர்நாடகாவின் சாம்ராஜ்நகர் மாவட்டம் இரண்டு மாநிலங்களையும் இணைக்கும் மாவட்டம். அங்கு 2 இலட்சம் தமிழர்கள் வாழ்கிறார்கள். அந்த மாவட்டத்தில் அவர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள்.*

[2023 ஏப்ரல் 12

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் பதில் சொல்லிவிடுங்கள். ஏனெனில், அவர் இப்போது கேள்வி கேட்டு முடிக்கமாட்டார். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தொழிற்சாலை வேண்டும் என்று கேட்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர், நீங்கள் மறுபரிசீலனை செய்யுங்கள். (குறுக்கீடு) இல்லை, நீங்கள் அரை மணி நேரம் பேசினால், என்ன செய்வது? உங்களுக்கு இன்னொரு கேள்வி கேட்கவும் வாய்ப்பு அளிக்கப்படும். (குறுக்கீடு) சீக்கிரம் கேள்வி கேட்டு முடியுங்கள்.*

திரு. S. சதாசிவம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முடித்துவிடுகிறேன். அதனால் எங்களுடைய தொகுதியில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கட்டாயம் தொழிற்பூங்காவை அமைக்க வேண்டும். 2 மாநிலங்களை இணைக்கின்ற மாவட்டமாக இருக்கின்றது. பெரிய தொழில் நகரமாக மேட்டூர் தொகுதி இருக்கின்றது. எனவே, தொழிற்பூங்கா ஒன்றை மேச்சேரி ஒன்றியம், மேட்டூர் அல்லது கொளத்தூரில் அமைத்துக் கொடுத்து, எங்களுடைய தொகுதியிலுள்ள இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்குமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் முன்னுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.*

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோதே மேட்டூர் தொகுதியில் என்னென்ன தொழிற்சாலைகள் ஏற்கெனவே இருக்கின்றன என்பதைப் பட்டியல் போட்டு சொல்லிவிட்டார்கள். முதலில் விவசாயம் நிறைந்த பகுதி; அங்கே தொழில்கள் இல்லை என்று சொன்னீர்கள். அதன்பிறகு நீங்களே என்னென்ன தொழிற்சாலைகளெல்லாம் அங்கே ஏற்கெனவே இருக்கின்றன என்று சொல்லியிருக்கிறீர்கள். மிகவும் நன்றி. இருந்தாலும் தொழிற்பூங்காக்கள் இல்லாத மாவட்டங்களில் புதிதாக தொழிற்பூங்காக்களை உருவாக்குவதற்காக மாவட்ட ஆட்சித் தலைவரிடத்தில் தொழில் துறையினுடைய சார்பில்*

2023 ஏப்ரல் 12]

கருத்துருக்களைக் கேட்டிருக்கிறோம். பல மாவட்டங்களிலிருந்து அவற்றிற்கான நிலம் எந்த இடத்தில் இருக்கிறது என்பது குறித்து ஆய்வு செய்துகொண்டிருக்கிறார்கள். சேலம் மாவட்டத்தில், குறிப்பாக உங்களுடைய பகுதியில் ஆயிரம் அல்லது 2 ஆயிரம் ஏக்கர் நிலம் இருக்கிறது என்று ஏற்கெனவே நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். அப்படி நிலம் அங்கே இருக்கக்கூடியபட்சத்தில், அது SIPCOT *தொழிற்பூங்கா துவங்குவதற்கான நடைமுறைகளையெல்லாம் பூர்த்தி செய்கின்ற அளவிற்கு அங்கே நிலம் இருக்கின்றபட்சத்தில், நிச்சயமாக அதுகுறித்து தொழில் துறையினுடைய சார்பில் ஆய்வுகளை மேற்கொண்டு, ஒரு தொழிற்பூங்காவை சேலம் மாவட்டத்தில் உருவாக்குவதற்கு நாம் பார்க்கலாம். ஏற்கெனவே* Salem Steel Plant*-ன் ஒரு பகுதியிலும் அரசாங்கத்தில் அவர்களுக்கு இருக்கக்கூடிய நிலத்தையும் நாம் எடுப்பதற்கான ஒரு முயற்சியும் இருக்கிறது. ஆகவே, இவையெல்லாம் ஒருங்கே வருகிறபோது, சேலம் மாவட்டத்தில் ஒரு புதிய தொழிற்பூங்கா அமைப்பதற்கான வாய்ப்பு எதிர்காலத்தில் பிரகாசமாக இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு.* S. *சதாசிவம் அவர்கள். கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள்.*

திரு. S. சதாசிவம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டம், பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட நிலையில், மாவட்டத்திலுள்ள* NLC *மூன்றாவது சுரங்கம் விரிவாக்கத்திற்கு நிலம் எடுக்க மாட்டோம் என்று மத்திய அரசு அறிவித்த நிலையில்,* NLC *மூன்றாவது சுரங்கத்திற்கு நிலம் எடுக்க மாட்டோம் என்று அரசு அறிவிக்க வேண்டும். மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களும் அறிவிக்க வேண்டும்; மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் கருணையோடு, பதற்றம் நிறைந்த கடலூர் மாவட்டத்தில் நிலம் எடுக்க மாட்டோம் என்று. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு.* S. *சதாசிவம், கேள்வி மேட்டூரில் தொழிற்பூங்கா அமைக்க வேண்டும் என்பது. நீங்கள் கடலூர் கதையை ஏன் ஆரம்பிக்கிறீர்கள்?*

திரு. S. சதாசிவம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு கட்டாயமாக ஆவன செய்ய வேண்டும் என மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதுகுறித்து ஏற்கெனவே பேசியாகிவிட்டது.*

திரு. S. சதாசிவம்: *மூலக் கேள்விக்கு சம்பந்தமில்லாமல் இருந்தாலும், அது முக்கியமான கேள்வி; மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இருக்கின்ற. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சட்டமன்றத் தீர்மானம் நிறைவேற்றி, ஒன்றிய அரசு முடிவு செய்கிற விஷயம். தொழிற்சாலை குறித்து கேளுங்கள். மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உணர்வுகளை நாங்கள் புரிந்துகொள்கிறோம். ஆனால், பொதுவாகக் கேள்வி நேரத்தில் கொள்கை சார்ந்த முடிவுகளை அறிவிப்பதில்லை என்பது இந்த மன்றத்தினுடைய மரபு. எனவே, அது கொள்கை சார்ந்த முடிவாக இருப்பதால், நான் இப்போது அதற்குப் பதில் சொல்வது பொருத்தமாக இருக்காது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 149, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் நா. எழிலன், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

149—

குடியிருப்புகள்

***51686—டாக்டர் நா. எழிலன்:**

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆயிரம் விளக்கு தொகுதி, கோடம்பாக்கம், புலியூரில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியக் குடியிருப்புகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?